DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 219/2024

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.1

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மூர்த்தி | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 22nd day of June, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது மல்லி கம்மாப்பட்டியில் வசித்து வருகிறேன். எனக்கு இரண்டு மகன்கள் உண்டு. இவ்வழக்கில் இறந்துபோனவர் எனது உடன் பிறந்த அண்ணன் முனியராஜ் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது அண்ணன் முனியராஜின் மகன் ஆவார். வழக்கு சம்பந்தமாக என்ன தெரியும் என்றால் தேதி ஞாபகம் இல்லை. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் காலை எனது அண்ணன் முனியராஜ் எனக்கு போன் தனக்கு வயிறு வலிப்பதாக சொன்னார். திருவில்லிபுத்தூரில் உள்ள கணேஷ்குமார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தேன். அவர் ஸ்கேன் பரிசோதனை செய்யவேண்டும் என்றும் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறும் கூறினார். நான் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார்கள். நான் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு எனது அண்ணன் முனியராஜிற்கு அறுவை சிகிச்சை

செய்யச்சொன்னார்கள். அன்று இரவு அறுவை சிகிச்சை நடந்தது. மறுநாள் காலை எனது அண்ணன் இறந்துவிட்டார். எனது அண்ணன் இறப்பிற்கு என்ன காரணம் என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அசாஆ 1** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழுங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலீஸார் விசாரித்தார்கள் என்றாலும், போலீஸ் விசாரணையில் எனது அண்ணனின் இறப்பு குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறு மல்லி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரி அண்ணன் மகன் என்பதால் புகார் கொடுக்கவில்லை என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 219/2024

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.2

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. சந்தனமாரி | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 22nd day of June, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது மல்லி கம்மாப்பட்டியில் வசித்து வருகிறேன். எனக்கு 4 ஆண் மக்களும் ஒரு பெண்குழந்தையும் உண்டு. வழக்கில் இறந்துபோனவர் எனது மகன் முனியராஜ் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது பேரன் ஆவார். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் எனக்கு எதுவும் தெரியாது. நான் எதையும் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலீஸார் விசாரித்தார்கள் என்றாலும், போலீஸ் விசாரணையில் எனது மகன் முனியராஜிற்கு ஜெயராணி என்பவரை திருமணம் முடித்து வைத்து அவருக்கு அமல ஆரோக்கிய மேரி, கருப்பசாமி என்ற இரண்டு குழந்தைகள் பிறந்தனர் என்றும், மருமகள் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர் என்றும், எனது மகனுக்கும்

மருமகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துவிட்டனர் என்றும், எனது மகன் முனியராஜ் கொத்தனார் வேலை செய்து என்னுடன் வசித்து வந்தார் என்றும், எனது மருமகள் ஜெயராணி 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும், எனது பேரனும் பேத்தியும் அவர்களது தாய்வழி தாத்தா கிட்டு என்பவரிடம் வழந்து வந்தார்கள் என்றும், அவர்களும் இறந்துவிட்ட பின்னர் எனது பேரனும் பேத்தியும் கிடைத்த வேலையை பார்த்து வந்தார்கள் என்றும், எனது பேரன் கருப்பசாமி அவ்வப்போது எனது மகன் முனியராஜை சந்தித்து செலவுக்கு பணம் வாங்கிச்செல்வார் என்றும், எனது பேரன் கருப்பசாமிக்கு குடிப்பழக்கம் இருந்ததால் அடிக்கடி வந்து பணம் கேட்டு பிரச்சனை செய்தார் என்றும், எனவே நானும் எனது மகன் முனியராஜிம் எனது பேரனை வரக்கூடாது என்று சொன்னதாகவும்., இந்நிலையில் கடந்த 30.05.2024 ம் தேதி இரவு 10.00 மணிக்கு எனது பேரன் கருப்பசாமி எனது மகன் முனியராஜிற்கு மாறி மாறி போன் செய்துகொண்டே இருந்தான் என்றும், ஆனால் எனது மகன் முனியராஜ் போனை எடுக்காமல் தூங்கிவிட்டார் என்றும், அதன்பின்னர் நானும் படுத்து தூங்கிவிட்டேன் என்றும், இரவு 11.30 மணியளவில் நானும் எனது மகன் முனியராஜிம் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த எனது பேரன் கருப்பசாமி எனது மகனை எழுப்பி போன் போட்டால் போன் எடுக்கமாட்டாயா என்று கேட்டதாகவும், அதற்கு முனியராஜ் இங்கு எதற்கு வந்தாய் என்று சத்தம் போட்டு விரட்டினார் என்றும், அப்போது கருப்பசாமி உன்னை பார்க்கவந்தால் என்னை விரட்டுவாயா என்று சொல்லிக்கொண்டே முனியராஜின் வயிற்றிலும் மார்பிலும் மாறி மாறி எத்தி தள்ளிவிட்டார் என்றும், அப்போது நான் சத்தம் போட்டவுடன் கருப்பசாமி எதுவும் பேசாமல் அங்கிருந்து கிளம்பி சென்றுவிட்டார் என்றும், இரவு நேரம் என்பதால் நானும் எனது மகன் முனியராஜிம் தூங்கிவிட்டு காலையில் எழுந்தபோது எனது மகன் வயிற்றிலும் மார்பிலும் வலிப்பதாக கூறினார் என்றும், பின்னர் அவன் அசா 1 யை அழைத்துக்கொண்டு சிகிச்சைக்காக

மருத்துவமனை சென்றார்கள் என்றும் ஆனால் சிகிச்சை பலனின்றி எனது மகன் முனியராஜ் இறந்துவிட்டான் என்றும், அதன்பின்னர் என்து மகன் மூர்த்தி இது சம்பந்தமாக மல்லி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றும், அதன்பேரில் வழக்கு பதிவு செய்து விசாரித்து வந்த நிலையில் கடந்த 02.06.2024 ம் தேதி விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து நடைபெற்ற பிரேத விசாரணை அறிக்கையின் போது நான் எனது மகன் இறப்பு குறித்து ஆய்வாளரிடம் சொன்னேன் என்றும் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரி எனது பேரன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

<u>S.C.No. 219/2024</u>

Deposition of witness for Prosecution/Defence/Court : <u>P.W.3</u>

<u>Accused present</u>

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மாரிமுத்து | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 22nd day of June, 2026.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மல்லி கம்மாப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்துவருகிறேன். சாட்சி மாரிமுத்து மகன் முனியாண்டி என்பவரை தெரியும். அவர் எங்கள் ஊரைச்சேர்ந்தவர். கடந்த 01.06.2024 ம் தேதி நானும் முனியாண்டியும் தற்செயலாக வடக்கு பகுதியிலிருந்து எங்கள் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தோம். அப்போது மல்லி சரக காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் இருந்தார்கள். சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும் சாட்சி முனியாண்டியும் கையொப்பம் செய்தோம். அந்த **பார்வை மகஜர் அசாஆ 2** ஆகும்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

பார்வை மகஜரில் நான் கையொப்பம் செய்யும்போது எதுவும் எழுதப்பட்டிருந்ததா என்றால் இல்லை. கையொப்பம் கேட்டார்கள். நாங்கள் கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் என்ன விபரங்கள் உள்ளது என்ற

விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.